**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC **.No. 1094/2023**

**2026 – ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02–ம் தேதி புதன்கிழமை ம.சா. 2– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ம.சா.** | : | 2 | | | |
| **பெயர்** | : | **மணிகண்டன்** | **தொழில்** | : | **Citiy Union Bank branch Managar** |
| **த/பெ.** | : | **ஆசைதம்பி** | **வட்டம்** | : | பெரம்பலூர் |
| **கிராமம்** | : | பெரம்பலூர் | **வயது** | : | 43 |

<u>02.09.2026</u>

**( எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூரில் வசித்து வருகிறேன். நான் கடுகூர் சிட்டி யூனியன் வங்கியில் கிளை மேனேஜராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் ஜெயபால் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கு எண்.500101012817303. அவர் முதலில் 02.09.2023 அன்று காசோலையை வசூலுக்கு செலுத்தினார். அந்த காசோலையை நாங்கள் SBI வங்கிக்கு கலெக்சனுக்காக அனுப்பினோம். 08.09.2023 அன்று Other reasons என்ற காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது. Other reasons என்பது என்ன என்று என்னால் சொல்லமுடியாது. SBI வங்கியால் தான் கூற இயலும். அவர் இரண்டாவதாக ஒரு காசைசோலையை (031621) 08.09.2023 அன்று காசோலையை வசூலுக்கு செலுத்தினார். 08.09.2023 அன்று Other reasons என்ற காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரியின் வங்கி கணக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. Other reasons என்பது என்ன என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் என்னால் சொல்லமுடியாது. வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்றால் Funds insufficient என்றுதான் குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். கையொப்பம் மாறுபட்டிருந்தால் Signature Mismatched என்று குறிப்பிடப்படும் என்றால் சரிதான். ஒரு காசோலை திருப்பப்படுவதற்கு வெளிப்படையாக சொல்லப்படும் காரணங்கள் என்ன வென்றால் Balance Insufficient, Signature Differs, Date Mismatched, Over written ஆகியவை ஆகும். Other reasons என்பது இவை தவிர மற்ற காரணங்களைதான் குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC **.No. 1094/2023**

**2026 – ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02–ம் தேதி புதன்கிழமை ம.சா. 3– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ம.சா.** | : | 3 | | | |
| **பெயர்** | : | **புருசோத்தமன்** | **தொழில்** | : | **SBI Bank branch Managar** |
| **த/பெ.** | : | **பாண்டிதுரை** | **வட்டம்** | : | காட்டுமன்னார்கோவில் (கடலூர் ) |
| **கிராமம்** | : | காட்டுமன்னார்கோவில் | **வயது** | : | 41 |

<u>02.09.2026</u>

**( எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை**

நான் தற்போது காட்டுமன்னார்கோவிலில் வசித்து வருகிறேன். நான் பொன்பரப்பி SBI வங்கியில் கிளை மேனேஜராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி ராஜாகிருஷ்ணன் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கு எண்.11660137501. ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 ஆகிய காசோலைகள் பொன்பரப்பி SBI வங்கியால் எதிரி ராஜாகிருஷ்ணனுக்கு கொடுப்பட்டது. Other reasons என்பது என்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது என்பதை தற்போது என்னால் கூற இயலவில்லை.

**( புகார்தாரர் தரப்பில்  அந்த ஆவணங்களை பெற்று சாட்சியம் அளிக்க வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.